**தலைப்பு 227 – ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் 2020 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 செப்தம்பர் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2020 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை

தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளது உறுதியான தன்மை,கணக்கீடுமதிப்பீடுகளது நியாயபூர்வத் தன்மை மற்றும் முகாமைத்துவம் மேற்கொண்ட தொடர்புடைய வெளிப்படுத்தல் என்பன மதிப்பாய்வு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களது கட்டமைப்பும் உள்ளடக்கமும் தொடர்பாக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலும் சம்பவங்களும் நியாயமாக உள்ளடங்கி உள்ளதுடன் வெளிப்படுத்தலை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் ஒட்டு மொத்தமாகச் சமர்ப்பிக்கப்பட்டும் உள்ளன.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன என்பதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச செயலங்களின் விரிவான வருமான அறிக்கைகளின் பிரகாரம் மொத்த வருமானம் மற்றும் திறைசேரியின் கணிணி அச்சீட்டின் பிரகாரம் அந்த அலுவலகங்களினால் வருமானம் ஆகியவற்றுக்கிடையே ரூபா 1,543,391 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | மேற்படி கணக்கு வைக்கப்படாத முத்திரை வருமானம் இரு சந்தர்ப்பங்களில் சீராக்கப்பட்டமை. | உரிய சீராக்கங்களை திருத்துதல் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காசுப் புத்தகத்தின் பிரகாரம் தலைமை அலுவலகத்தினால் சேகரிக்கப்படும் கட்டணங்கள் ரூபா 130,321,050 ஆக இருந்ததுடன் திறைசேரியின் கணிணி அச்சீட்டின் பிரகாரம் அது ரூபா 130,292,150 ஆனமையால் ரூபா 28,900 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திறைசேரியின் கணிணி அச்சீடு திணைக்களத்தின் புத்தகங்களை இணக்கம் செய்தல் மற்றும் சீராக்கங்களை எதிர்காலத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வருமானங்கள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6.2 வருமானமல்லாத பெறுவனவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 23,574,570 ஆன ஏனைய பெறுவனவுகளின் பெறுமதியானது காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | வருமான தலைப்பு இலக்கம் 2003-02-03 க்கு உரிய வருமானங்கள் மாத்திரம் A.C.A-1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல். |
| (ஆ) | திணைக்களத்தின் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்தின் மூலம் கிடைத்த ரூபா 2,663,573 ஆன வருமானங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் ஆக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் அந்த வருமானம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த செயற்திட்டத்தின் வருமானம் தொடர்பில் ஆட்பதிவு ஆணையாளர் கணக்கீட்டு உத்தியோகத்தராக செயற்படுவதில்லை. | குறித்த சீராக்கங்களை உரிய முறையில் மேற்கொள்ளல். |

### 1.6.3 மீண்டெழும் செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஐந்தொகையின் பிரகாரம் குத்தகை வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் குத்தகை பெறுமதி ரூபா 14,266,223 ஆன போதிலும், செலவின கூற்றின் பிரகாரம் அந்தப் பெறுமதி ரூபா 13,201,776 ஆனமையால் ரூபா 1,064,447 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | செலவின பேரேட்டில் செலவின கூற்றிற்கு தரவுகளைப் பெற்றுக்கொள்ளளும் போது ஏற்பட்ட தவறுதல் ஆகும். | செலவினங்களை சரியாக கணக்கு வைத்தல் |
| (ஆ) திறைசேரியின் கணிணி அச்சீட்டின் பிரகாரம் செலவின பொழிப்பின் மிகை அறவீட்டுப் பெறுமதி மற்றும் செலவின பேரேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 98,621 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இணக்கப்பாடுகள் சரியாக மேற்கொள்ளப்படும். | தரவுகளை உரிய முறையில் பதிவு செய்தல். |

### 1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் தனிப்பட்ட மீதி பதிவேடுகளின் பிரகாரம் திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டிய மொத்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 129,825,133 ஆன போதிலும் கட்டுப்பாட்டு கணக்கின் பிரகாரம் அந்தப் பெறுமதி ரூபா 129,827,277 ஆனமையால் தனிப்பட்ட மீதிகள் மற்றும் கட்டுப்பாட்டு கணக்கு ஆகியவற்றுக்கிடையே ரூபா 2,144 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது முற்பண ‘‘பீ’’ கணக்கில் ஏற்பட்டுள்ள வழுக்களின் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 7,144 ஆக காணப்பட்ட மீதி தற்போது ரூபா 2,144 வரை குறைவடைந்துள்ளது. | முற்பண ‘‘பீ’’ கணக்கின் மீதிகளை சரியாக கணக்கு வைத்தல். |

### 1.6.5 வைப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியின் கணனி அச்சீட்டுப் பதிவின் பிரகாரம் வைப்புப் பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 5,614,887 ஆன போதிலும் நிதி செயலாற்றல் கூற்றின் அந்த பெறுமதி ரூபா 5,612,402 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது. | திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட பொது வைப்புக் கணக்கு சரியானதாகும். | வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து திருத்துதல். |
| (ஆ) | திறைசேரியின் கணிணி அச்சீட்டு பதிவுகளில் வைப்புக்களின் பொழிப்பு (SA-30) இன் பிரகாரம் 6000-00-18-0-30 ஆம் இலக்க பொது வைப்பு கணக்கில் மீளாய்வாண்டின் வைப்பு பெறுவனவுகள் மற்றும் வைப்பு செலுத்தல்களின் பெறுமதிகள் முறையே 670,810 மற்றும் ரூபா 844,257 ஆன போதிலும் நிதிக்கூற்றுக்களில் ACA 4 மாதிரியில் அந்த பெறுமதிகள் முறையே ரூபா 668,326 மற்றும் ரூபா 841,766 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, இந்த பெறுமதிகள் கட்டுநிதி சீராக்கல் கணக்குளிலும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியின் கணிணி அச்சீட்டு பதிவில் பரீட்சை மீதி (SA 21) மற்றும் பொது வைப்பு பேரேட்டில் பிரகாரம் வைப்புக் கணக்குகள் தொடர்பான கூற்று (ACA 4) இணக்கம் செய்யப்பட்டுள்ளது. | வைப்பு பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்களை சரியாக பதிவு செய்தல் |

### 1.6.6 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளபடியான நிதியல்லாத சொத்துக்கள் மற்றும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியிலான நிதியல்லாத சொத்துக்கள் ஆகியவற்றின் பெருமதி ரூபா 31,311,460 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதிகளை திருத்தும் பேரேட்டுப் பதிவுகளின் மூலம் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | குறித்த சீராக்கங்களை சரியாக வெளிப்படுத்துதல் |

### 1.6.7 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) திறைசேரியின் அச்சீட்டு பதிவுகள் மற்றும் திணைக்களத்தின் பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய திணைக்களங்களால் இந்த திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 580,278,866 ஆன போதிலும் கட்டு நிதி சீராக்கல் கணக்கில் ஏனைய திணைக்களங்களால் இந்த திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமாக ரூபா 581,343,313 சீராக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் பேரேடு மற்றும் திறைசேரியின் கணிணி அச்சீடுகளின் மீதிகள் சரியாக இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளை தயாரிக்கின்றேன். | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தரவுகளை சரியாக இணங்கண்டு கணக்கு வைத்தல். |
| (ஆ) திணைக்களத்தின் பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய செலவின தலைப்பொன்றிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 92,630,107 ஆன போதிலும் கட்டு நிதி சீராக்கல் கணக்கில் அது ரூபா 99,714,051 ஆக சீராக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி சீராக்கல் கணக்கினை சரியாக தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஏனைய திணைக்களங்களிடமிருந்து முற்பண கணக்கிற்கான பெறுவனவுகள் ரூபா 7,031,393 மற்றும் ஏனைய திணைக்களங்களுக்கான முற்பண கணக்கில் இருந்தான கொடுப்பனவுகள் ரூபா 3,384,647 கட்டு நிதி சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | திணைக்களத்தின் பரீட்சை மீதி மற்றும் திறைசேரியின் வருமான பொழிப்பு ஆகியவற்றின் பிரகாரம் ஏனைய திணைக்களங்களினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 193,911,450 ஆன போதிலும் கட்டுநிதி சீராக்கல் கணக்கில் அந்த பெறுமதி ரூபா 194,169,285 ஆக சீராக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 2,888,420 தொகை திறைசேரிக்கு அனுப்பபட்டிருந்ததுடன் அது திறைசேரிக்கு கிடைத்திருக்காததுடன் அது நிதி நிலைமைக் கூற்றில் வழியில் உள்ள பணமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரிக்கு கிடைக்காத பணத்தை வழியில் உள்ள பணமாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | வழியில் உள்ள பணத்தை உரிய முறையில் கணக்கு வைத்தல். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டிற்காக திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட 03 மீண்டெழும் செலவின விடயங்களின் மற்றும் 05 மூலதன செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டின் 20 முதல் 100 சதவீதம் வரையான சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. | கொவிட் 19 தொற்று நோய் காரணமாக செலவினம் மேற்கொள்வதற்கான தேவைப்பாடு ஏற்படாமையின் அடிப்படையில் நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. | மதிப்பீடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் நி.பி.94(i) இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டு எல்லைகளை விஞ்சி செலவினமொன்றுக்கு அல்லது கடப்பாடொன்றுக்கு கட்டுப்பட கூடாத போதிலும் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டு எல்லையினை விஞ்சி 4 செலவின விடயங்களில் ரூபா 2,742,430 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்ட விடயங்களை கட்டுப்படுத்தும் இயலுமையொன்று இல்லாதிருந்தமையால் சிறிய பெறுமானத்தால் நிதியேற்பாட்டினை விஞ்சி பொறுப்பு உருவாகியுள்ளது. | நிதியேற்பாட்டினை விஞ்சி பொறுப்புகள் ஏற்படுத்தக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்காக 2021 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்ட ரூபா 3,462,815 பெறுமதியான பொறுப்புக்கள், கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியான முறையில் மேற்கொள்வதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை சரியாக பதிவு செய்தல். |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் போது 4 செலவின விடயங்களின் பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு உரிய கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் பெறுமதி மற்றும் அந்த ஆண்டின் செலவின பேரேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதி ஆகியவற்றுக்கு இடையே ரூபா 162,235 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரியாக மேற்கொள்வதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டது. | - மேற்படி - |
| (ஈ) | பொறுப்புக்கள் கூற்றின் பெறுமதிகள் மற்றும் கொடுப்பனவு உறுதிச் சீட்டின் பிரகாரமான பெறுமதி ஆகியவற்றுகிடையே 5,316,575 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது | - மேற்படி - | - மேற்படி - |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

### அவதானிப்புகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் இலக்கம் 01/2018 இன் 04 ஆம் பந்தி | கிராம உத்தியோகத்தர்களால் அடையாள அட்டைகளுக்காக சேகரிக்கப்படும் பணம் 7 நாட்களினுல் அல்லது அதற்கு மேற்படாத காலத்தினுள் பிரதேச செயலகங்களுக்கு கையளித்து பொது 172 பற்றுச் சீட்டொன்றினை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 09 நாட்கள் முதல் 04 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்த 141 சந்தர்ப்பங்கள் 05 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த விடயம் தொடர்பில் உரிய அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்படல். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் இலக்கம் 02/2020 இன் வழிகாட்டி இலக்கம் 12 இன் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடங்க வேண்டிய மீளாய்வாண்டிற்குரிய அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டினை அடிப்படையாக கொண்ட | 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறித்த தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டங்களை சரியாக தயாரித்தல். |

| | | |
|---|---|---|
| முன்னுரிமைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம், நடைமுறைப்படுத்தும் காலச் சட்டகம் மற்றும் அந்த செயற்பாடுகளின் இலக்குகள் மற்றும் வருமானங்கள் திணைக்களத்தினால் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வருமான தலைப்புக்களுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட வருமான இலக்குகள் 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் அதன் செயன் முன்னேற்றத்தினை பரிசோதிக்கும் போது திட்டமிடப்பட்ட நிதியேற்பாடினை போன்று 392 சதவீதம் வரையிலும் கூடுதலாக செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்களை போன்றே மொத்த நிதியேற்பாடும் செலவிடப்படாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. | திட்டமிடப்பட்டவாறு உரிய பணிகளை நிறைவேற்ற முடியாது இருந்தது. | சரியான திட்டங்களை தயாரித்தல் மற்றும் உரிய திருத்தங்களை அங்கீகரித்தல் |

### 3.2 ஏனைய அவதானிப்புகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 4,494,476 ஆன உதவு தொகைகள் மற்றும் மாற்றல்களின் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டு செலவினமாக பதிவு செய்யப்பட்டிருந்தது. | உதவு தொகை மாற்றல்கள் ஆளணி வேதன செலவினங்களில் உள்ளடக்கபட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தரவுகளை உரிய முறையில் இணங்கண்டு கணக்கு வைத்தல் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய செலவினத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 92,630,107 ஆன போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அந்தப் பெறுமதி ரூபா 93,001,775 ஆக பதிவு செய்யப்பட்டிருந்தமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் செலவினம் ரூபா 371,668 இனால் மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாகியிருந்தது. | E-Nic செலவினம் இதன் மூலம் காண்பிக்கப்படுகின்றது. | - மேற்படி - |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் முற்பணங்களை அறவீடு செய்தல்களின் பெறுமதி ரூபா 603,810 ஆன போதிலும் திணைக்களத்தின் பரீட்சை மீதியின் பிரகாரம் காசாக அறவிடப்பட்ட முற்பணங்களின் அளவானது ரூபா 15,112,282 ஆனமையால் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 14,508,472 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | இந்த ரூபா 603,810 காசு அடிப்படையின் கீழ் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் வைப்பு பெறுவனவுகள் மற்றும் வைப்பு செலுத்தல்களின் பெறுமதிகள் முறையே ரூபா 592,626 மற்றும் ரூபா 999,189 ஆக பதிவு செய்யப்பட்ட போதிலும் திணைக்களத்தின் பரீட்சை மீதி மற்றும் ACA 4 மாதிரியின் பிரகாரம் ஆண்டினுள் செலவு மற்றும் வரவு வைத்தல்கள் முறையே ரூபா 5,612,403 மற்றும் ரூபா 9,806,477 ஆகும். | வைப்பு பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்கள் காசாக மேற்கொள்ளப்பட்ட அளவு மாத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**3.3 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் திட்டத்தில் வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் கட்டிட பராமரிப்பு செலவினம் ஆகியவற்றின் பெறுமதிகள் முறையே ரூபா 5.76 மில்லியன் 40.5 மில்லியன் மற்றும் ரூபா 0.59 மில்லியன் என ரூபா 46.85 மில்லியன் காணப்பட்ட போதிலும் அது ரூபா 95.17 மில்லியன் ஆக திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் உள்ளபடியான பராமரிப்பு செலவினம் ரூபா 81.72 ஆனமையால் திட்டமிடப்பட்ட செலவினத்தை விட ரூபா 34.87 மில்லியன் அதாவது 74 சதவீதம் மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. | ஊழியர்களை வரவழைப்பது மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பெறுகைகள் திட்டத்தின் மாற்றியமைப்பதை தவிர்க்க முடியாதிருந்தது. | பெறுகைகள் திட்டம் உரிய முறையில் தயாரிக்கபபடுதல் மற்றும் மாற்றப்படல் |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டிராத ரூபா 1.273 மில்லியன் கூட்டுத்தொகையான 14 உருப்படிகளின் 72 அலகுகள் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திருத்தப்பட்ட பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 4.08 மில்லியன் ஆன 6 விடயங்களின் 42 அலகுகள் 2020 ஆம் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த உருப்படிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. தாமதத்தினால் அறிக்கையிலான திருத்தங்களை மேற்கொள்ள முடியாதிருந்தது. | - மேற்படி - |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் போது நிதிக் குத்தகை முறையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மோட்டார் வாகனத்தின் குத்தகை காலம் 2019 ஆம் ஆண்டின் பொது நிறைவடைந்திருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதனை திணைக்களத்திற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 செப்தெம்பர் முதல் மோட்டார் வாகனத்தை சுவீகரிக்கும் கோவைகளின் பணிகள் இடம் பெறுகின்றன. | சொத்துக்களின் நிர்வாகம் செயற்திறனாக மேற்கொள்ளப்படல். |

**3.5 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராம உத்தியோகத்தர்களினால் அடையாள அட்டைகளுக்காக அறவிடப்படும் பணம் மற்றும் அந்தப் பணத்தை பிரதேச செயலகங்களுக்கு செலுத்துதல் தொடர்பான பொழிப்பு அறிக்கை ஒன்று அடுத்த மாதத்தில் 05 ஆந் திகதிக்கு முன்னர் அடையாள அட்டை பிரிவிற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் குளியாப்பிட்டிய செயலகத்தின் 67 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அந்த | இந்த தேவைப்பாடு தொடர்பில் உரிய பிரதேச அலுவலகங்களில் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | உள்ளக கட்டுப்பாடு செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பேணப்படல். |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கைகளை உரிய முறையில் வழங்கியிராத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | திணைக்களத்தினால் ரூபா 7.5 மில்லியன் கிரயம் மற்றும் ரூபா 9.39 மில்லியன் கிரயமான 2 வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு முறையே 8 மற்றும் 6 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் போதும் கிரயத்தின் அடிப்படையில் காப்புறுதி செய்யப்படமையால் அவற்றின் காப்புறுதி செலவினம் மீளாய்வாண்டின் போதும் ரூபா 191,535 வரை அதிகரித்திருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது அனைத்து வாகனங்களும் மதிப்பிடப்பட்டு காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | (i) 2019 ஒக்டோபர் முதல் 2020 மார்ச் வரையிலும் மேற்கொள்ளப்பட்ட முன்னர் அச்சிடப்பட்ட அட்டைகள் ஒரு மில்லியன் மீள கட்டளையிடப்பட்டு கொள்வனவு செய்யும் கொடுக்கல் வாங்கல்கள் சரியான பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு இணங்கியிராதமையால் 2020 செப்தெம்பர் 10 ஆந் திகதிய 02/IS/2020 ஆம் இலக்க அமைச்சரவையின் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 94 மில்லியன் ஆகும். மேலும் இந்த பணிகளுக்காக திணைக்களத்தினால் ரூபா 56.49 மில்லியன் பொறுப்புகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்வதற்கு இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னர் அச்சிடப்பட்ட அட்டைகள் இல்லாதிருந்த இக்கட்டான நிலைமையொன்றில் துரிதமாக 10 இலட்சம் அட்டைகளை கொள்வனவு செய்தல் இடம் பெற்றுள்ளது. தற்போது அனைத்தும் தவறின்றி பயன்படுத்தப்பட்டுள்ளன. 2020 செப்தெம்பர் 10 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தை நடைமுறைப்படுத்துதல் நடைமுறைக்கு சாத்தியமானது அல்ல என்பது அவதானிக்கப்படுகின்றது. அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் எஞ்சிய பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் நடைமுறையை உரிய முறையில் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திணைக்களத்தினால் 2020 சனவரி, பெப்ரவரி, யூலை, ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் ஆகிய மாதங்களில் அச்சிடப்பட்ட 92,780 எண்ணிக்கையான அடையாள அட்டைகளில் 5,095 அடையாள அட்டைகள் அதாவது 5 சதவீதமானவை குறைபாடுகளுடன் காணப்பட்டது. | தொழில்நுட்ப கோளாறுகள் மற்றும் தரவு கட்டமைப்பில் ஏற்படும் பிரச்சினைகள் காரணமாக குறைபாடுகள் ஏற்படும் குறைபாடுகளை குறைப்பதற்கு உரிய பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அடையாள அட்டைகளை வெளியிடும் ஒட்டுமொத்த நடைமுறையும் செயற்திறனாக்குதல். |
| (ஈ) | 1 முதல் 16 வருடங்கள் வரையான காலமாக திணைக்களத்தின் சேவையில் இல்லாத மரணமடைந்த, பணிவரிதாக்கப்பட்ட மற்றும் சேவையை கையவிட்டுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 269,101 கூட்டுத்தொகையான கடன் தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு திணைக்களத்தினால் இது வரையிலும் முடியாதிருந்தது. | மரணமடைந்த உத்தியோகத்தரின் கடன் தொகைகைய அறவிடுவதற்கும் ஏனைய கடன் தொகைகளை பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | கடன்மீதிகளை தீர்ப்பனவு செய்யும் நடைமுறையை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சாதாரண சேவையின் கீழ் அடையாள அட்டைகளை வழங்கும் நடைமுறையின் முதற் கட்டமாக கிராம உத்தியோகத்தரினால் விண்ணப்பங்களை பொறுப்பேற்றல், பிரதேச செயலகங்களுக்கு கையளித்தல் மற்றும் உரிய அங்கீகாரங்களுடன் தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்தல் ஆகியவற்றுக்கு சுமார் 01 மாதம் முதல் 01 வருடங்கள் வரையான காலம் எடுக்கப்பட்டமையால் பொது மக்களுக்கு செயற்திறனான | குறைபாடுகளை திருத்துவதற்கு விசேட கவனம் எடுக்கப்பட்டுள்ளது. | அடையாள அட்டைகளை வழங்கும் ஒட்டு மொத்த நடைமுறையும் செயற்திறனாக்குதல். |

சேவை ஒன்றினை வழங்க முடியாதிருந்த 166 சந்தர்ப்பங்கள் 05 மாவட்ட அலுவலகங்களின் தெரிவிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1384 ஆன போதிலும் உண்மையான பதவியணி 1271 மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவியணி 123 மற்றும் 10 ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட உண்மையான, வெற்றிடமான மற்றும் மிகை பதவியணி தொடர்பான தகவல்கள் சரியானதாகும். | பதவியணி நிர்வாகம் முறைமைப்படுத்தப்படல் |
| (ஆ) திணைக்களத்தின் உதவி ஆணையாளர், சட்ட உத்தியோகத்தர், மற்றும் மொழிபெயர்ப்பாளர் பல பதவிகளில் ஒன்று வீதம் வெற்றிடமாக காணப்பட்டதுடன் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது அது தொடர்பில் அமைச்சிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் ஆட்சேர்க்கப்பட்ருக்கவில்லை. | சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதுடன் மொழிபெயர்ப்பாளர் பதவியை நிரப்பபுவதற்காக ஒருங்கிணைந்த சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 31 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 44 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாக நிலவிய போதிலும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் அந்த பதவிகளுக்கு உத்தியோகத்தர் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |